
# எந்தன் ஊரே



மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தன் ஊரே!

மூதூர் எம். எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

நூலின் பெயர் :- எந்தன் ஊரே!

விடயம் :- கவிதை

நூலாசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

உரிமை :- நூலாசிரியருக்கு

வெளியீடு :- மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்.

பிரதிகள் - 500

முதற் பதிப்பு - 2015 ஜுன்

விலை - 120/ =

**ISBN** **- ISBN978-955-41569-1-3**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மூதூர் மண்ணும் மக்களும் உயர்ச்சியுற வேண்டுமென்ற உன்னத நோக்கோடு மூதூர்க்கு அளப்பரிய சேவைகள் புரிந்த என் நேசத்திற்குரிய பட்டயக் கணக்காளர் **அல் ஹாஜ் கே . எம் . எச் அக்பர்** அவர்கட்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

மூதூர் மண்ணும் மக்களும் உயர்ச்சியுற வேண்டும், சகல துறைகளிலும் வளர்சியடைந்த ஊராக மூதூர் மிளிர வேண்டும் . என்ற உன்னத எண்ணமும் நோக்கும் என் பள்ளிப் படிப்புக் காலத்தில் இருந்தே என்னுள் ஊற்றெடுத்தோடிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாகத்தான் அன்று நான் மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கரஸின் தேசியத் தலைவர் எம். எச். எம். அஷ்ஃரப் அவர்களுடன் இணைந்து அவரின் அரசியலில் மிகவும் தீவிரமாகச் செயற்பட்டேன். பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளராகக் கூட 1994 இல் களமிறங்கினேன். காரணம் அரசியல் அதிகாரத்தினூடாக மூதூர் மண்ணை அபிவிருத்தியின் சிகரத்திற்கு இட்டுச் செல்லலாம் என்ற திடமான நம்பிக்கை எனக்கிருந்ததன் காரணமாக

ஆனால் இறைவனின் நாட்டம் வேறாக இருந்தது . ஊரை உயர்த்தக்கூடிய எந்தவொரு அதிகாரமும் எனக்கு கிட்டவில்லை. என் உள்ளத்துள் ஊரைப்பற்றிய உணர்வுகளும் வேதனைகளும் மிகமிக அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன.

இயற்கையின் கொடைகள் அதிகம் நிறைந்த இந்த மூதூர் மண் வறுமையால் ஆராதிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. மூதூரின் செழுமையையும் வளத்தையும் அன்று மூதூர் **உமர் நெய்னார் புலவர்** பாடுகையில்.....

**“ புவியினிலே விளங்கும் மூதூரெனும் பதி**
**பொங்குநதி பாய்வதனா லெங்கும்வள மாகிக்**
**கவினொழுகு செந்நெல்லொடு கன்னலுமே மலிந்து**
**காட்சிதரு கின்றதிரு மாட்சிபெறு நாடு”** என்றார்.

மூதூர் மண் ஈன்றெடுத்த மாபெரும் எழுத்தாளர் மறைந்த **வ . அ . இராசரத்தினம்** அவர்கள் “ **மாவலியின் பெயரால் விளங்கும் மணித்திரு நாடு”** என்று சுவாமி விபுலானந்தர் அவர்கள் பாடியது. தனது ஊரான மூதூரைப் பற்றித்தான் எனக்கூறி பேருவகை கொண்டார். இத்தகைய வளமிகு மூதூருக்கு ஏன் இன்று இந்த வறுமை விவசாயம், மீன்பிடி, கல்வி, சுகாதாரம் போன்ற அனைத்துத் துறைகளிலும் எந்த விருத்தியுமில்லாத நிலைமை இவற்றையெல்லாம் பற்றி மிக ஆழமாக நான் சிந்தித்த பொழுதுகளில் ஜனனித்ததுதான் “ எந்தன் ஊரே!” என்ற இந்தக்கவிதை நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் காலங்களிளாவது மூதூர் மண்ணில் புத்தெளிச்சி ஒன்று மலர்ந்து அதன் மூலம் அங்கே பொருளாதார அபிவிருத்தியுடன் கல்வி, கலை சுகாதாரம், வர்த்தகம், மீன்பிடி, விவசாயம், போன்ற பல்வேறு துறைகளிளும் பாரிய விருத்தி ஏற்படல் வேண்டும் அத்துடன் மக்களின் வாழ்வு வசந்தத்தால் ஆராதிக்கப்படல் வேண்டும் வறுமைகள் மூதூர் மண்ணை விட்டு விரண்டோட வேண்டும். மாடி வீடுகளும் வாகன வசதிகளும் மூதூரில் வாழ்கின்ற ஒவ்வொரு குடும்பத்தவர்களுக்கும் சொந்தமாக அமைய வேண்டும் அரச திணைக்களங்கள் கூட்டுதாபனங்களில் மூதூரின் மாந்தர்கள் உயர்பதவிகளை அணி செய்ய வேண்டும். மருத்துவ பொறியியல் துறைகளிலும் தொழில் நுட்பத்துறைகளிலும் மூதூர் உயர்ச்சியுற வேண்டும் உன்னத தலைமைகள் மூதூர் மண்ணை முன்னேற்றத்தின் சிகரத்திற்கு இட்டுச்செல்லல் வேண்டும். என்ற உயரிய நோக்கோடு தான் இக்கவிதை நூலை யாத்து வாசகர்களாகிய உங்கள் கரங்களுக்கு தவழவிட்டுள்ளேன்.

நன்றி

**பெரிய பாலம்**
**மூதூர் - 05**
**தொடர்பு – 0776288299**

**மூதூர் எம். எம். ஏ. அனஸ்**
**10 - 06 - 2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தன் ஊரே!

♦ எந்தன் ஊரே மூதூரே !
ஏற்றம் இழந்த எழிலூரே!
உந்தன் அவலம் கண்டெந்தன்
உள்ளம் உருகி அழுகிறதே!

♦ கள்ளம் கபடம் இல்லாமல்
கனிந்த நல்ல நோக்குடனே
உள்ளம் உந்தன் அவலத்தை
உரைத்திட ஏங்கித் திளைக்கிறதே!

♦ உந்தன் அவலம் அனைத்தினையும்
உயரிய கவிதை வடிவினிலே
தந்திட இதயம் துடிக்கிறதே!
தீர்வைக் காணத் தவிக்கிறதே!

♦ மூதூர் மண்ணே முழுமகிழ்வே!
முன்னோர் வளர்த்த நல்லூரே!
ஏதும் இல்லா நிலைமைக்கு
ஏன்தான் நீயும் இன்றானாய்!

♦ முத்தூர் என்றே பேர்பெற்று
முற்றாம் செல்வம் அன்றுற்றாய்
கத்தும் நிலைக்கு இன்றான
கதைதான் உனது காட்சியெலாம்

எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ ஊரே நீயும் உணர்வுற்றால்
உன்னத நிலைக்கு உயர்வாயே!
பேரே பெற்று நாட்டினிலே
பெருமை தன்னில் திளைப்பாயே!

♦ ஈழ நாட்டின் இடங்களிலே
இனிதே வளங்கள் நீபெற்றும்
வாழ வழியே இல்லாமல்
வறுமை நிலையில் உள்ளாயே!

♦ செல்வச் செழிப்பின் உயரிடமாய்ச்
சிறப்பே கண்ட உன்வாழ்வு
அல்லல் நிறைந்த நிலைமைக்கு
ஆகிய தின்று ஏனாமோ!

♦ துன்பம் துயரம் எல்லாமும்
துலங்கும் தளமாய் உள்ளாயே!
இன்பம் என்பது இல்லாத
இழிந்த நிலையும் உனக்கேதான்

♦ வாழ்வில் வசந்தம் அறியாத
வறுமை நிலையில் உள்ளாயே!
தாழ்மை தன்னை நீயேதான்
தேடி அழைத்துக் கொண்டாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வறுமை என்ற சொல்லதனின்
வாழிட மாக உள்ளாயே!
நிறைந்த செல்வப் பெருக்கினிலே
நீயும் திளைப்பது எப்போதோ!

- நாடே உயரும் போதினிலே
நன்றே நீயும் உயராமல்
வாடிய நிலையில் உள்ளாயே!
வசந்தம் இழந்து போனாயே!

- எத்தனை வளங்கள் பெற்றிருந்தும்
என்றும் வறுமை உனக்கேனோ?
இத்தனை இன்னல் எதற்காக!
இன்னும் உணரா துள்ளாயே!

- வறுமை துன்பம் துயரெல்லாம்
வளமாய் வளரும் இடமாக
சிறுமை நிலையில் உள்ளாயே!
சிந்தித் தேனும் பார்த்தாயா?

- உந்தன் மீனவ மக்களுமோ
உள்ள நிலையை நோக்குகையில்
எந்த உயர்வும் இல்லாமல்
ஏழ்மை நிலையில் உள்ளனரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ வங்கக் கடலே வளைந்தோடும்
வளமே நீயும் பெற்றிருந்தும்
இங்கே உந்தன் மீனவர்கள்
இன்னல் கொண்டே வாழ்கின்றார்.

♦ வாழைச் சேனை கல்முனைஎன
விளங்கும் ஊர்களின் மீனவரோ!
ஏழை என்ற நிலைதாண்டி
ஏற்றம் பெற்றே வாழ்கின்றார்.

♦ மாடி வீடும் வாகனமும்
மற்றைய வளமும் பெற்றவர்கள்
கோடிச் செல்வம் கொண்டோராய்க்
களிப்பாம் வாழ்வில் திகழ்கின்றார்.

♦ இலங்கை நாட்டு மீனவரில்
இன்னல் அதிகம் கொண்டோராய்த்
துலங்குவ துந்தன் மீனவரே!
துன்பம் இவர்கள் தோழமையே!

♦ இந்து சமுத்திரக் கடலினிலே
இன்றும் சிறிய தோணியிலே
தந்தே உயிரைப் பணயமெனத்
தொழிலே செய்தும் வறுமைதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ கடலின் தொழிலின் காரணமாய்க்
கண்ணீர்க் கடலில் மூழ்கிட்டோர்
விடிவை வாழ்வில் காண்பதற்கு
வழியும் காணா துள்ளாயே!

♦ உயிரைக் காக்கும் அளவுக்கு
உணவை மட்டும் கடலினது
தயவே என்று உன்மீனோர்
தானே பெற்று வாழ்கின்றார்

♦ சுனாமி வீடும் இல்லையெனில்
சிறிய ஓலைக் கொட்டில்தான்
கனத்த மீனோர் இல்லமென
காட்சி தந்திடும் உன்னிடத்தே!

♦ உந்தன் மீனவர் வாழ்கையது
உயர வழியும் காணாமல்
இந்த நாட்டில் ஏழ்மையிலே
இன்னும் வாழப் போறாயோ!

♦ நாட்டின் பிறவூர் மீனவர்கள்
நன்றே அரசின் உதவியினால்
கூடிய செல்வம் பெருக்கினிலே
குதுகல மாகப் வாழ்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ அரசின் உதவியும் கிட்டாமல்
ஆரின் தயவும் கிடைக்காமல்
சிரமம் தாங்கி உன்மீனோர்
சிறுமை நிலையில் வாழ்கின்றார்

♦ மூதூர் மண்ணே! உந்தனது
மீனவ மக்கள் ஏன்தானோ!
பாதக வாழ்வில் திளைக்கின்றார்
பார்த்து நீயும் உள்ளாயே!

♦ நல்ல மீன்பிடிச் சாதனமும்
நவீன மீன்பிடிப் படகுகளும்
எல்லாம் பெற்று உன்மீனோர்
எளிலாய் என்று வாழ்வாரோ!

♦ தினமும் உணவுக் கஸ்டத்தில்
தரித்திரம் மிகைத்த நிலைதன்னில்
உனது மீனோர் உள்ளனரே!
உயர அவர்க்கு வழியாதோ!

♦ வாட்டும் நோயை விரட்டுதற்கு
வைத்தியம் பார்க்கப் பணமின்றி
வீட்டில் வீழ்ந்தே மீனவர்கள்
வீணாய் வாழ்வை இழக்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ உயர்நிலைக் கல்வி பிறவூரில்
உவந்தே சென்று பயில்வதற்கு
இயலா நிலையில் வறுமையிலே
இருப்பதும் மீனவ மாணவரே!

♦ கல்வி என்றால் உச்சநிலை
கல்விக் கூட வாத்தியென
எல்லா மீனவ மாணவரும்
எண்ணிட நீயேன் வகைசெய்தாய்

♦ வைத்தியம் பொறியியல் பிரிவுகளில்
வனப்பாய் மீனவ மாணவர்கள்
இத்தரை மீதில் கற்பதற்கு
இன்னும் வழிநீ காட்டலையே!

♦ இதனால் உந்தன் மீனோர்க்கு
இன்னல் வாட்டும் நிலைதானே!
இதமாய் இவர்கள் வாழ்வுயர
இங்கே வழிநீ காட்டலையே!

♦ மீன்பிடித் துறைமுகம் மீனவர்தமை
மேவிய வீட்டுத் திட்டமெலாம்
காண்கிற பாக்கியம் உன்னோர்க்குக்
கனவாய் ஆகிப் போயினவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ அரசை அணுகி உன் மீனோர்
ஆன உதவி அத்தனையும்
பெறவே நீயும் உதவாமல்
பிழையாம் நெறியில் உள்ளாயே!

♦ வயலே செய்யும் உன்னோரும்
வறுமை வாழ்வின் வடிவேதான்
உயிரைக் காக்கும் அளவுக்கு
உணவை மட்டும் பெறுகின்றார்

♦ வறுமைப் பட்டோர் உந்தனது
வயலின் செய்கைக் காரர்என
பிறஊர் மக்கள் கூறுகையில்
பெரிதும் வேதனை ஆகிறதே!

♦ எங்கும் மாவலி நீர்பாய்ந்தும்
ஏற்ற காணி வளமிருந்தும்
தங்கம் உன்னில் விளையலயே!
தரித்திர உன்நிலை மாறலயே!

♦ மாவலி நதியே வலைந்தோடும்
மண்ணின் ஊராம் உந்தனுக்கு
பாவ நிலைமை வரலாமோ!
பஞ்சம் தஞ்சம் தரலாமோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ பொன்னும் மணியும் விளைந்தன்று
புன்னிய பதியாய்த் திகழ்ந்தாயே!
உண்ணும் உணவும் இன்றுனக்கு
உயரிய கஷ்டம் ஆயிற்றே!

♦ விவசா யத்தின் திட்டத்தில்
வகைவகை அரசின் உதவிகளும்
உவந்து உன்னை அடையலையே!
உதவ உனக்கும் ஆளிலையே!

♦ சிறிய போகச் செயற்கையிலே
சீராய் நீரும் பாயாமல்
வறட்சி என்ற கொடுமைக்கு
வயலும் உன்னில் ஆகிறதே!

♦ 44. மாரி காலச் செய்கையிலே
மழையின் வெள்ளப் பெருக்காலே
பாரிய அழிவை அடைகின்றார்
பாவம் உந்தன் விவசாயி

♦ 45. தொழிலே என்ற ஒன்றுக்காய்
தொடரும் நெல்லின் செய்கையதால்
செழுமை இல்லா நிலையில்உன்
செந்நெல் செய்கைக் காரருளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ நீரின் பாசன வசதியினை
நீயும் நன்கு பெறுவதற்கு
ஆரும் உனக்கு உதவாத
அவல நிலையில் உள்ளாயே!

♦ உழவு இயந்திர உதவிகளும்
உரிய வடிச்சல் வசதிகளும்
இழந்த உந்தன் விவசாயி
இன்னல் வாழ்வின் வடிவன்றோ!

♦ இழந்து இழந்து இழப்பதற்கு
இன்னும் ஏதும் இல்லாத
வழமை நிலைதான் உந்தனது
வயலின் செய்கைக் காரர்க்கு

♦ பிற ஊர் கமத்தின் காரரெலாம்
பெரிதாம் செல்வப் பெருக்கினிலே
சிறப்பாம் வாழ்வு வாழுகையில்
சிறுமை நிலைதான் உன்னவர்க்கு

♦ பாவம் உந்தன் விவசாயி
பாதக நிலையே அவர்வாழ்வு
ஆவல் கொண்டு அவர்கட்கு
ஆர்தான் உதவப் போகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ விதியே! விதியே! சொல்வாயோ!
வருத்தம் மூதூர்க் கேன்என்று
கதியே இல்லா நிலையினிலே
கண்ணீர் தானோ அதன்கதையும்!

♦ கல்வி நிலையிலும் மூதூரே!
கீழாம் நிலையில் நீயுள்ளாய்
நல்ல பெரிய பதவிகளை
நல்கும் கல்வி உனக்கிலையே!

♦ வாத்தித் தொழிலைப் பெறுவதற்கும்
வாழ உணவு கிட்டுதற்கும்
பாத்திர மான படிப்பேதான்
பாரில் உந்தன் கல்விநிலை

♦ வைத்திய நிபுணர் நிறையலையே!
விஞ்ஞா னவித்தகர் வரவிலயே!
பத்தும் பலதாம் துறை சார்ந்தோர்
பல்கி உன்னில் பெருகலயே!

♦ உயர்தர வகுப்பு விஞ்ஞானம்
உன்னில் இன்னும் உயரலயே!
வியக்கும் கலைகள் கற்றோரும்
வகையாய் இன்னும் வரவிலயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ கல்விக் கூட நிலையதுவும்
கவலை நிலையில் உள்ளதுவே!
நல்ல போதனை ஆசான்கள்
நிறைவாய் இல்லா நிலைதானே!

♦ கட்டடம் மற்றும் பௌதீக
கனத்த வளத்தின் தேவையுடன்
இடர்கள் நிறைந்த கலைக்கூடம்
இதுதான் உந்தன் பள்ளிநிலை

♦ மருத்துவத் துறையில் உன்நிலையோ
மனதை வாட்டி வதைக்கிறதே!
சிறிய நோய்க்கும் திருமலைக்கே
செல்லும் நிலைதான் உன்நிலைமை

♦ சனத்தொகை நிறைந்த பதியுன்னில்
சத்திர சிகிச்சை நிலையில்லை
நிபுணத் துவத்தின் வைத்தியமும்
நிரந்தர நிலையில் இல்லையே!

♦ மாரி காலம் வந்திடிலோ!
மழையின் நீரும் வடிவதற்கு
பாரிய வடிச்சல் இல்லாமல்
பிரளய மாக மாறுகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ தொற்றும் நோயும் இதனாலே
தொடராய் உன்னை வாட்டுறதே!
வற்றாச் சோகம் கொண்டேதான்
வையம் தன்னில் திகழ்கின்றாய்

♦ கனிய வளங்கள் உன்னிடத்தே
கடுமை யாக நிறைந்திருந்தும்
இனிதே தொழிலின் ஆலைகளும்
இல்லா ஊராய் உள்ளாயே!

♦ கைத்தொழில்ச் சாலை நிறுவுவதற்குக்
கனத்த வளங்கள் உனக்கிருந்தும்
இத்தரை மீதில் தொழிற்சாலை
இல்லா நிலையில் உள்ளாயே!

♦ சின்னஞ் சிறிய வீடுகளும்
சிதரிய ஓலைக் கொட்டில்களும்
உன்னில் தானே நிறைந்துள்ள
உண்மை நிலையை உணர்வாயா?

♦ பெரிதாம் வசதிகள் நிறைந்திட்ட
பென்னம் பெரிய வீடெல்லாம்
அரிதாய்த் தானே உன்னிடத்தே
அமைந்தும் உளதே அறிவாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- .இல்லிட மில்லா மாந்தர்களும்
இருப்பதும் உன்னில்த் தானன்றோ!
பொல்லா இந்தக் குறைதன்னைப்
போக்கா நிலையில் உள்ளாயே!

- யாரும் எதையும் சொன்னாலும்
யாவும் நன்றென ஏற்கின்றாய்
தீர ஆய்ந்தோர் செப்புகையில்
தீதாய் எண்ணி வெறுக்கின்றாய்

- நல்லார் தலைமை உன்னிடத்தே
நன்கே நாடி வருகையிலே
பொல்லாத் தனமாய் நடக்கின்றாய்
புவியில் உயர்வை இழக்கின்றாய்

- வேதம் என்று அரசியலை
விளங்கித் தவறாய் நடக்கின்றாய்
ஆதலி னாலே அழிவைத்தான்
அதிகம் நீயும் அடைகின்றாய்

- கள்ளம் கபடம் கொண்டோரைக்
கண்ணிய மாக மதிக்கின்றாய்
உள்ளத் தூய்மை கொண்டோரை
உதரி இன்பம் காண்கின்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எங்கே எதிலே என்றாலும்
  ஏற்றம் எத்தர்க் களிக்கின்றாய்
  பங்கம் இல்லாப் பெரியோரைப்
  பாவி என்றே பார்க்கின்றாய்.

- உண்மை நேர்மை கொண்டோர்க்கு
  உரிய இடத்தை மறுக்கின்றாய்
  தின்மை நாட்டம் கொண்டோரைத்
  தகுந்த தலைமை என்கின்றாய்

- சேவை நோக்குக் கொண்டோரைச்
  செருப்பாய் நீயும் கணிக்கின்றாய்
  நாவைப் பேணும் நல்லோரை
  நாசத் தாராய் புரிகின்றாய்

- கற்றுத் தேர்ந்த அறிஞர்களைக்
  கசடர் என்றே கருதுகிறாய்
  பற்றுப் பணத்தில் கொண்டோரைப்
  புனிதன் என்றே போற்றுகிறாய்

- உள்ளம் எல்லாம் உன்உணர்வாய்
  உதிரம் ஓடும் உத்தமரைக்
  கள்வர் என்றே கணிக்கின்றாய்
  கயமைத் தனத்தில் திளைக்கின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ உன்னை உயர்த்த வேண்டுமென
உன்னத நோக்குக் கொண்டோரைச்
சின்னத் தனமே செய்கின்றாய்
சிந்தை இழந்து நடக்கின்றாய்

♦ உன்னை வைத்தே உழைக்கின்ற
ஒட்டு மொத்தக் கயவர்களை
நன்றாம் மாந்தர் என்கின்றாய்
நாசம் தன்னை அடைகின்றாய்.

♦ எங்கோ இருந்து வருவோரை
ஏற்ற தலைமை என்கின்றாய்
இங்குன் தலைமைச் சான்றோரை
இழிந்த நிலையில் பார்க்கின்றாய்

♦ ஊரார் முரசைப் பல்லென்று
உறுதி கொண்டே உரைகின்றாய்
பேறாம் உனது பல்லதனின்
பெருமை உணரா திருக்கின்றாய்

♦ வேசம் போடும் நீசர்களை
வேதம் போன்று மதிக்கின்றாய்
நேசத் துடனே உனைஉயர்த்தும்
நெஞ்சத் தோரை விரட்டுகிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ தூர நோக்குச் சிந்தனைகள்
துளியும் இன்றித் திகழ்கின்றாய்
தீராத் துன்பம் இதனாலே!
தினமும் உந்தன் தோழமையே!

♦ பணமே! பணமே! பணமென்று
பாரில் உன்னை விற்போரைக்
குணத்தின் குன்றாய் மெச்சுகிறாய்
குடத்துத் தவளையின் நிலைக்கானாய்!.

♦ உதிரம் எல்லாம் உன்உணர்வாய்
ஓடும் உள்ளம் கொண்டோரைச்
சதியே செய்து விரட்டுவதால்
சீரிய வாழ்வை இழக்கின்றாய்.

♦ எந்த எவரோ! மற்குடத்தை
ஏற்றிப் போற்றி மதிக்கின்றாய்
உந்தன் பளிங்குப் பாத்திரத்தை
உடைத்தே மகிழ்வு காண்கின்றாய்!

♦ உந்தன் வாசல் மல்லிகையின்
உயரிய மணத்தை நுகராமல்
அந்தோ அயலூர் மல்லிகைதான்
அதிகம் வாசம் என்கின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ .உன்னில் பிறந்த அறிஞர்தம்
உன்னத கருத்தை மறுக்கின்றாய்
என்றும் பிறஊர் மடையர்தம்
எல்லாக் கருத்தும் ஏற்கின்றாய்

♦ படித்த இளைஞர் யுவதிகட்குப்
பார்க்கத் தொழிலும் கிட்டாத
கொடுமை நிலையும் உனக்கேதான்
காரணம் தானும் அறிந்தாயா?

♦ உயரிய சேவை அமைச்சரெல்லாம்
உன்னை நாடி வருகையிலே
கயமைத் தனமாய் நடக்கின்றாய்
கண்ணியம் கொடுக்கா திருக்கின்றாய்

♦ நாடே அறிந்த திறனோர்கள்
நன்றே உன்னில் இருக்கையிலே!
நாடி அவர்தம் சேவைபெற
நீயும் ஏன்தான் மறுக்கின்றாய்

♦ அகதி என்ற நிலைமைக்கு
அதிக தடவை ஆளாகி
இகத்தில் இயம்ப முடியாத
இன்னல் யாவும் நீயுற்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூதூர் மண்ணே நீஅன்று
முற்றாய் வாழிடம் துறந்திட்டாய்
பாது காப்பு என்றேதான்
பயணம் கந்தளாய் ஏகிட்டாய்

- ஏது நடந்தும் உந்தனுக்கு
எந்த உணர்வும் வரவிலயே
காது கேளாச் செவிடன்போல்
கணக்கே இன்றி உள்ளாயே

- உயர்ச்சி என்பது உந்தனுக்கு
உரிமை இல்லா நிலைதானோ!
முயற்சி ஏதும் செய்யாமல்
முடங்கிச் சோம்பி உள்ளாயே!

- உந்தன் நிலையை நீயென்னி
உணர்ச்சி பெறா திருந்தாயேல்
எந்த உயர்வும் உனக்குவரா
என்ற உண்மையை உணர்வாயா?

- உனது உயர்வுக்கு குழைப்போரை
உள்ளம் உடையச் செய்கின்றாய்
கனத்த சதிகள் செய்தவரைக்
கண்ணீர் சிந்த வைக்கின்றாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எந்த நேரம் எது செய்யின்
ஏற்றம் என்றே புரியாமல்
வந்த வாறு நடக்கின்றாய்
வசந்தம் இழந்து போகின்றாய்!

- பரந்த நோக்கு இல்லாமல்
பார்வை குறுகி நடப்பதனால்
சிறப்பை இழந்து போகின்றாய்!
சோகம் தன்னை ஏற்கின்றாய்!

- வளங்கள் யாவும் நிறைந்திருந்தும்
வறுமைப் பிடியில் தவிக்கின்றாய்!
விளங்கா நிலையில் நீஇன்று
வீணாய் இன்னல் அடைகின்றாய்!

- நாட்டில் உள்ள ஊர்களெல்லாம்
நாளும் நன்கு உயருகையில்
வாட்டும் வறுமை நிலையினிலே
வாழ்வை நீயும் கடத்துகிறாய்!

- குரங்கின் தொல்லையும் உன்னிடத்தே
கூடிக் கொண்டு போகிறதே!
சிரமம் பெரிதாய் அடைந்தும்நீ
சிரத்தை இதனில் எடுக்கலையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊரே உன்னில் வறுமையது
உயர்வாய் இருக்கக் குரங்கினது
பாரிய தொல்லையும் காரணமே!
புரிந்தும் புரியா துள்ளாயே!

- குரங்கின் தொல்லை தீர்ப்பதற்குக்
குறிப்பாய் உனக்கோர் வழியில்லை
பரந்த சிந்தனை கொண்டோரும்
பதவியில் உனக்கு வாய்க்கலயே!

- தங்கள் பஞ்சம் போக்குதற்கு
தஞ்சம் பிரதே சசபைஎனத்
தங்கிய எண்ணம் கொண்டோரைத்
தேர்வதை நீயும் தவிர்த்திடுவாய்!

- கட்டாக் காலி மாடாடும்
காண்பதும் உந்தன் வீதியில்த்தான்
கெட்ட இந்த நிகழ்வெல்லாம்
கதியில் அழிய வகைசெய்வாய்.!

- ஊரே உனக்கு உதவுகிற
உயரிய பதவியை வகிப்பதற்கு
பாரிய மோசக் காரர்களைப்
பார்த்தேன்? நீயும் தேர்கின்றாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறையைப் பணியும் பள்ளிக்கும்
  இனிதே தலைமை தருவதற்கு
  நிறைவாம் நல்லோர் மறுப்பதற்கும்
  நீதான் காரணம் புரிவாயா!

- ஊரே உந்தன் பெயர்சொல்லி
  உயர்வாய்ச் செல்வம் சேர்ப்பதிலே
  பேரே பெற்றுத் திகழ்வோரின்
  பணியை நீயும் தடுத்திடுவாய்!

- நல்லோர் தம்மைப் பெரியோரென
  நன்கே நீயும் போற்றுகின்ற
  நல்ல நிலைமை உன்னிடத்தே
  நிலைக்கும் காலம் பிறந்திடுமோ!

- தீர்க்க தரிசனப் பார்வைதனில்
  தேர்ந்தே நீயும் தழைத்தோங்கி
  ஆர்யார் எவர்க்கு எவ்விடமென
  ஆய்ந்தே என்றும் அளிப்பாயா!

- உண்மை நேர்மை நீதிநெறி
  உன்னத தன்மை அத்தனையும்
  நன்கே உன்னில் நிலைத்தோங்க
  நாளும் நீயும் முயல்வாயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ மூதூர் மண்ணே இந்நாட்டில்
மகிமை ஊர்தான் நீயென்னும்
காதூர் செய்தி நாம் கேட்கும்
காலம் விரைந்து வந்திடுமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் வாழ்க!

என்னரும் மூதூர் வாழ்க!
ஏற்றமும் பெற்று வாழ்க!
நன்றாம் வளங்கள் பெற்று
நாட்டினில் நன்கே வாழ்க!
உன்னத தன்மை கொண்ட
உயரிய ஊராய் வாழ்க!
இன்னலும் இல்லா தாகி
இப்புவி இனிது வாழ்க!

உயரிய தலைமை பெற்று
உயர்ச்சியின் ஊராய் வாழ்க!
கயமைகள் மாய்ந்து நல்ல
கண்ணியம் நிறைந்து வாழ்க!
நியதிகள் நிலைத்து ஓங்கி
நிம்மதி நிறைந்து வாழ்க!
வயதினில் நீண்டு மக்கள்
வளமுடன் வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைஞ்சல்

மூதூர் மண்ணில் நல்மகிழ்வு
மலர இறையே! அருளிவிடு!
ஏது இடரும் இவ்வூரை
என்றும் அணுகாக் காத்துவிடு!

எந்தக் குறையும் இல்லாத
எளிலின் ஊராய் உயர்த்திவிடு!
இந்த ஊரில் வறுமைநிலை
இல்லா நிலையை ஈந்துவிடு!

கல்வி ஞானம் அனைத்தினிலும்
கூடிய உயர்வைக் கொடுத்துவிடு!
நல்லோர் நிறைந்த ஊரென்ற
நாமம் பெறவும் செய்துவிடு!

நல்லோர் தலைமை தருகின்ற
நன்றாம் ஊரெனத் திகழவிடு!
பொல்லாத் தனங்கள் அத்தனையும்
பொசுங்கும் தளமாய் ஆக்கிவிடு!

வேசம் போடும் மாந்தர்களை
விளங்க ஊருக் குதவிவிடு!
நாசம் இல்லா நல்லூராய்
நானில மீதில் உயர்த்திவிடு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச் செழிப்பில் மூதூரைச்
சிறந்து ஓங்கச் செய்துவிடு!
அல்லாஹ் உந்தன் அருள்தன்னை
அதிகம் அவ்வூர்க் களித்துவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எந்தனூர் மூதூரின் ஏற்றமிலாத் தன்மையது
தந்திட்ட வேதனையைத் தாங்காது – எந்தன்
இதயம் வடித்த இரத்தத்துக் கண்ணீர்
உதயமே இந்நூல் உணர்.

மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

ISBN 978-955-41569-1-3

9 789554 156913

Printed by : A.R.T. Trinco 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org